**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.223/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. தனசேகர் |
| Husband/Father Name | ராமலிங்கம் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 56 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.09.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 என்னுடைய மகன் ஆவார். கடந்த 1 வருடத்திற்கு முன்பு என் மகனுக்கு மதியம் 2.00 முதல் 2.15 மணியளவில் அவுசிங் போர்டு இல் யாரோ என் மகன் கண்ணனை கல்லால் தலையில் அடித்துவிட்டதாக கூறினார்கள். பிறகு அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி பெற்று பிறகு திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றோம். அடித்தவர்கள் யார் என்ற விவரம் தெரியவில்லை. என் மகன் சுயநினைவின்றி இருந்தார். மேலும் என் மகனின் வலது காது அறுபட்டு இருந்ததை பிளாஸ்டிக் சர்ஜரி செய்தோம். சென்னை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சை பெற்றார். அவருடன் நான் இருந்து கவனித்துகொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. போன் மூலமாக தான் தகவல் வந்தது அதை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தில் என் மகனை யார் அடித்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது நேராக மருத்துவமனைக்கு தான் சென்றேன். இந்த சம்பவம் நடந்த 3 அல்லது 4 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளனே என்றால் அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை அதனால் யார் அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. எனது மகனை பின்னால் வந்து அடித்துவிட்டார்கள்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.24 16:08:05 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.